ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1833/5 - 2013 ඔක්තෝබර් මස 21 වැනි සඳුදා - 2013.10.21
*1833/5 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

*அறிவித்தல்*

**நெல் குற்றும் தொழிலுக்கான சம்பளச் சபை**

*(136 ஆம் அத்தியாயமான) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் நெல் குற்றும் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத்தீர்மானங்கள் 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.*

டபிள்யூ. ஜே. எல். யு. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

கொழும்பு,
*2013, ஒற்றோபர் 05.*

**அட்டவணை**

நெல் குற்றும் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1971 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆந் திகதிய 14950ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளதும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டனவுமான தீர்மானங்கள் அவ்வட்டவணையின் II ஆம் பகுதிக்கு பதிலாக பின்வரும் புதிய பகுதியை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

*II ஆம் பகுதி*

**சம்பளங்கள்**

நேர வேலைக்கு ஏற்புடைத்தான ஆகக் குறைந்த சம்பள வீதம் நாளொன்றுக்கு வேலையாள் ஒருவருக்கு 750 ரூபாவாக இருத்தல் வேண்டும்.

*11- 179*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.